Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 242/2023**

**Deposition of PW.1 (LW1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | மாயதேவர் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | பாறைப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 60/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.02.2026.

(1 ,2 எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் பாறைப்பட்டியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கு பூர்வகுடி சொத்துக்களை ஆஜர் எதிரியான சேரராஜனும் அவரது மகள் நவீனா, சக்திவேல் என்பவர்களும் மோசடியாக அவர்களது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து விட்டார்கள். அது சம்மந்தமாக எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்தது. அதை மனதில் வைத்துக் கொண்டு 31.10.2021 ஆண்டு அன்று காலை 10.00 மணியளவில் நான் உள்ளூரில் இறப்பு நிகழ்ச்சிக்கு சென்று விட்டு எங்கள் ஊர் நாடக மேடை அருகே வந்த போது ஆஜர் எதிரி சேரராஜன் இருசக்கர வாகனத்தில் வைத்து என்னை வழி மறித்தார். அப்போது அவர் எனது இரு கால்களையும் பிடித்துக் கொண்டார். அவரது மகன் சக்திவேல் என்னை இழுத்து போட்டு குரல் வளையில் அவர் மிதித்தார். கல்லை தூக்கி போட முயற்சித்தார். சக்திவேல் எனது இடது பக்க கைவிரலை கடித்தார். காயம் ஏற்பட்டு விட்டது. காயம் பட்ட நான் ஆத்தூர் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். நடந்த சம்பவம் சம்மந்தமாக எதிரி மீது நடவடிக்கை எடுக்கும் படி செம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் உங்களின் உடன் பிறந்த சகோதரர் மற்றும் அவரது மகன் என்றால்சரிதான். உங்களுக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும், எழுத்து கூட்டி தான் படிப்பேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் புகார் எழுதிக் கொடுக்கும் நபர் செம்பட்டி காவல் நிலையம் அருகில் இருந்தார். அவரிடம் ரூபாய் 100 கொடுத்து புகாரை எழுதினேன். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். உங்களுடன் உடன் பிறந்த அண்ணன் பாண்டி என்பவரும் உள்ளார் என்றால் சரிதான் அவர் இறந்து விட்டார். ஆஜர் எதிரிகளுக்கும், உங்களுக்கும் , உங்கள் அண்ணன் பாண்டி குடும்பத்தாருக்கும் சொத்து தொடர்பாக பிரச்சனை உண்டு என்றால்சரிதான். நீங்கள் புகாரில் சொல்லியுள்ள விவரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளிர்கள் என்றால்சரிதான். உங்கள் போலீஸ் விசாரணையில் உங்கள் கைவிரலை உங்கள் அண்ணன் சேரராஜன் கடிக்கவில்லை என்றும் கல்லை உங்கள் மீது போடவில்லை என்றும், நீங்களாகவே உங்கள் அண்ணன் மீது உள்ள கோபத்தில் உங்கள் அண்ணன் உங்கள் கைவிரலை கடித்ததாகவும், கல்லை தூக்கி போட்டதாகவும் நீங்கள் ஆத்திரத்தில் கோபப்பட்டு கூறியுள்ளதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு வெளிப்படையான காயம் இல்லை என்றும், மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும் வாக்குமூலம் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் யார்இருந்தார்கள் என்றால் எங்கள் சண்டையை விலக்கி விட்ட குருநாதன், வாஞ்சிநாதன் , சாமி தேவன் , விஜயா, சின்னம்மாள் ஆகியோர்கள் இருந்தார்கள். நானும், வாஞ்சிநாதனும் தான் இருந்தோம். மற்ற நபர்கள் 10 பேர் இருந்திருப்பார்கள். பிரகாஷ், ஜான்சி ராணி ஆகியோர் சம்பவ இடத்தில்இல்லை. அவர்களை தவறுதலாக சேர்த்துள்ளார்கள். நீங்கள் சொல்லும் குருநாதன், வாஞ்சிநாதன் , சாமி தேவன் , விஜயா, சின்னம்மாள் ஆகியோர்கள் இவ்வழக்கில் சாட்சியாக இல்லை என்றால் சரியல்ல. உங்கள் அண்ணன் பாண்டி டிராக்டரை லோனில் வாங்கியதற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால்சரியல்ல. சேரராஜன் தான் செம்பட்டி IOB-ல் வாங்கிய மேற்சொன்ன டிராக்டரை விற்று விட்டார். ஆஜர் எதிரி உங்களை அடித்ததாக , திட்டியதாக சொல்வதற்கு காரணங்களை குறிப்பிட்டு நீங்கள் புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், பாண்டிக்கும், உங்களுக்கும் பொது

சொத்து சம்மந்தமாக பிரச்சனை உள்ளதை மனதில் வைத்துக் கொண்டு இந்த புகாரை பொய்யாக கொடுத்துள்ளீர்கள் என்றால்சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor